
பக்கங்கள் 16+ 03

# மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | வைகாசி 31 சனிக்கிழமை 14.06.2024 | அதிர்வு 315

## ஓட்டோவுடன் எரிந்த நிலையில் பொலிஸ் அதிகாரியின் சடலம்

**நீர்கொழும்பில் சம்பவம்**



நீர்கொழும்பு – கொச்சிக்கடை, கம்மல்துறை கடற்கரைப் பகுதியில் இன்று சனிக்கிழமை காலை ஓட்டோவுடன் 02

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்




# எங்களுக்கு எந்தத் தீர்வும் இல்லை; கண்ணீர் மட்டுமே தொடர்கின்றது!

## தமிழ் அரசியல்வாதிகள் மீது நம்பிக்கை இழந்துவிட்டோம் என்றும் காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தினர் தெரிவிப்பு

(கி.வசந்தன்)

“இன்று வரை எங்களுக்கு எந்தத் தீர்வும் இல்லை. எங்கள் கண்ணீர் மட்டும் தொடர்கின்றது. தமிழ் அரசியல்வாதிகளின் ஒரே குறிக்கோள் பதவியில் உயிர் வாழ்வதே. அவர்கள் எந்தத் தொலைநோக்குப் பார்வை யும் இல்லாதவர்கள். இதனால் நாங்கள் அவர்கள் மீது நம்பிக்கை வைக்கவில்லை.”

- இவ்வாறு தமிழர் தாயகக் காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர். 02



# இளைஞர் ஒருவர் வெட்டிப் படுகொலை!

**யாழில் வன்முறைக் கும்பல் நேற்று இரவு வெறியாட்டம்**

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணத்தில் வன்முறைக் கும்பலால் இளைஞர் ஒருவர் நேற்று வெள்ளிக்கிழமை இரவு வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

இருபாலை, மடத்தடி பகுதியைச் சேர்ந்த சந்திரன் துஷ்யந்தன் எனும் இளைஞரே வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் அறிந்த கோப்பாய் பொலிஸார் துரித விசாரணைகளை முன்னெடுத்து வாள்வெட்டுத் தாக்குதல் 02




உலகத் தமிழர்களின் உறவுப்பாலம் - Bonding Tamils Globally



# திருமலை முகத்துவாரத்தில் ஆயுதம் தேடும் நடவடிக்கை!

(அபு அலா )

திருகோணமலை – ஈச்சிலம்பற்று பொலிஸ் பிரிவிலுள்ள இலங்கைத்துறை முகத்துவாரம் பகுதியில் உள்ள வீடொன்றின் காணியில் விடுதலை புலிகளால் புதைத்து வைக்கப்பட்டுள்ள ஆயுதங்கள் இருப்பதாகத் தெரிவித்து இன்று சனிக்கிழமை (14) காலை பெக்கோ இயந்திரம் மூலம் அகழ்வுப்பணிகள் இடம்பெற்றன.

மூதூர் நீதிவான் நீதிமன்ற நீதிபதி தஸ்னீம் பௌசான் முன்னிலையில் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

ஈச்சிலம்பற்று பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் மூதூர் நீதீமன்றத்தின் அனுமதியுடன் இந்த அகழ்வுப் பணி முன்னெடுக்கப்பட்ட நிலையில் அகழ்வு இடம்பெற்ற இடத்தில் இருந்து எந்தவித தடைய பொருள்களும் மீட்கப்படவில்லை.

இதனையடுத்து மூதூர் நீதிமன்ற நீதிபதி அகழ்வை இடைநிறுத்துமாறு பொலிஸாருக்கு உத்தரவு வழங்கினார்.

சுமார் ஒரு மணி நேரம் முன்னெடுக்கப்பட்ட அகழ்வுப் பணி இடைநிறுத்தப்பட்டது.இந்த இடத்துக்கு விசேட அதிரடிப் படையினர், தடையியல் பிரிவுப் பொலிஸார், அரச அதிகாரிகள் உள்ளிட்ட பலரும் பிரசன்னமாகியிருந்தனர்.

## ஓட்டோவுடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எரிந்த நிலையில் பொலிஸ் அதிகாரி ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது என்று கொச்சிக்கடை பொலிஸார் தெரிவித்தனர்.

நீர்கொழும்பு பொலிஸ் குற்றப் புலனாய்வுப் பிரிவில் கடமையாற்றும் நீர்கொழும்பு, தழுபத பிரதேசத்தைச் சேர்ந்த 56 வயதுடைய பொலிஸ் அதிகாரியே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சடலமானது பிரேத பரிசோதனைக்காக நீர்கொழும்பு பொது வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் இதுவரை எந்தவித தகவல்களும் கிடைக்கவில்லை என்று பொலிஸார் குறிப்பிட்டனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை நீர்கொழும்பு சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயம் மற்றும் கொச்சிக்கடை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## எங்களுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வவுனியா – ஏ 9 வீதியில் 1306 ஆவது நாளாகப் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் கொட்டகை முன்னால் இன்று அவர்களால் முன்னெடுக்கப்பட்ட கவனவீர்ப்புப் போராட்டத்தின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு கூறினர்.

அவர்கள் மேயலும் தெரிவிக்கையில், "போரின் இறுதிக் கட்டத்தின் போதும் அதற்குப் பின்னரும் வலுக்கட்டாயமாகக் காணாமல் ஆக்கப்பட்ட குழந்தைகளின் தமிழ்த் தாய்மார்களான எங்கள் போராட்ட பயணம் 3036 ஆவது நாளாகத் தொடர்கின்றது.

எங்கள் குழந்தைகளைக் கண்டுபிடிக்க வேண்டும் என்ற தவிப்போடு மட்டுமன்றி, இனப்படுகொலையிலிருந்து எதிர்காலத் தலைமுறையினரைப் பாதுகாக்கவும், தமிழர் இறையாண்மைக்குச் சர்வதேச ஆதரவைக் கோரவும், அமெரிக்க ஐரோப்பிய ஒன்றியம் ஒரு காலத்தில் எங்களுக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றுமாறு அழைப்பு விடுக்கின்றோம்.

அரசியல் தீர்வு ஒன்று தேவை என யுத்தத்தின் போது இலங்கை அரசுக்கும் அதன் பின்னணியில் இருந்த பங்களிப்பாளர்களுக்கும் ஐரோப்பிய ஒன்றியம், வாக்குறுதி அளித்தது. ஆனால், இன்று வரை எங்களுக்கு எந்தத் தீர்வும் இல்லை. எங்கள் கண்ணீர் மட்டும் தொடர்கின்றது.

இன்று, அமைதிக்குப் பதிலாக, இலங்கையின் வடக்கு – கிழக்கு இராணுவ ஆக்கிரமிப்பின் கீழ் உள்ளது. புலனாய்வு அமைப்புகள் பொதுமக்கள் வாழ்க்கையை ஆதிக்கம் செலுத்துகின்றன. அதேநேரத்தில் அரசுடன் தொடர்புடைய போதைப் பொருள் வலையமைப்புகள் மற்றும் பாலியல் சுரண்டல் தமிழ் இளைஞர்களையும் பெண்களையும் அச்சுறுத்துகின்றன.

நாங்கள் தமிழ் அரசியல்வாதிகள் மீது நம்பிக்கை வைக்கவில்லை. அவர்களின் ஒரே குறிக்கோள் பதவியில் உயிர் வாழ்வது என்று தெரிகின்றது. அவர்கள் எந்தத் தொலைநோக்குப் பார்வையையும், தைரியத்தையும், சர்வதேச ஈடுபாட்டின் மூலம் இறையாண்மையைப் பெற்ற பிற ஒடுக்கப்பட்ட நாடுகளிடம் இருந்து கற்றுக்கொள்ள எந்த முயற்சியையும் காட்டவில்லை.

அவர்கள் ஐரோப்பிய ஒன்றியத்தைப் பொறுப்பேற்க வைக்கவோ அல்லது போருக்குப் பிறகு தமிழ் மக்கள் அனுபவித்த துரோகத்தைச் சர்வதேச சமூகத்துக்கு நினைவூட்டவோ தவறிவிட்டனர்.

எனவே, தாயகத்திலும், புலம்பெயர் நாடுகளிலும் உள்ள ஒவ்வொரு தமிழரும் எழுந்து சர்வதேச ஈடுபாட்டைக் கோர வேண்டும் என்றும் நாங்கள் அழைப்பு விடுக்கின்றோம்.

தமிழர் இறையாண்மை மட்டுமே தமிழர்களுக்கும், சிங்களவர்களுக்கும், முழுக் குடிமக்களுக்கும் நிலையான அமைதியைக் கொண்டு வரும்." – என்றனர்.

## இளைஞர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடத்திய சந்தேகத்தில் இருவரைச் சில மணி நேரத்தில் கைது செய்துள்ளனர்

மேற்படி இருவரும் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர்.





### மட்டுவிலில் அமைந்துள்ள

# பொருளாதார மத்திய நிலையத்தை மீண்டும் இயக்குவதற்குத் தீர்மானம்

(எஸ். நிதர்ஷன்)

மட்டுவிலில் அமைந்துள்ள யாழ்ப்பாணம் பொருளாதார மத்திய நிலையத்தை மீள இயக்குவது என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவரும் அமைச்சருமான இ.சந்திரசேகரன் மற்றும் யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு இணைத் தலைவரும் ஆளுநருமான நா.வேதநாயகன் ஆகியோரின் பங்கேற்புடன் நேற்று நடைபெற்ற கலந்துரையாடலில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

மட்டுவிலில் அமைந்துள்ள யாழ்ப்பாணம் பொருளாதார மத்திய நிலையத்தை, ஆளுநர், அமைச்சர், நாடாளுமன்ற உறுப்பினர் க.இளங்குமரன், யாழ். மாவட்டச் செயலர் ம.பிரதீபன், சாவகச்சேரி பிரதேச செயலர், சாவகச்சேரி பிரதேச சபையின் செயலாளர், மாகாண மற்றும் மாவட்ட விவசாயத் திணைக்களப் பணிப்பாளர்கள், பொருளாதார மத்திய நிலையத்தில் கடைகளைப் பெற்றுக் கொண்டவர்கள் ஆகியோர் இன்று சனிக்கிழமை (14) நேரில் சென்று பார்வையிட்டனர்.

அதன் பின்னர் மட்டுவிலில் பன்றித் தலைச்சி அம்மன் கோயில் அருகில் உள்ள மண்டபத்தில் கலந்துரையாடல் நடைபெற்றது.

கலந்துரையாடலின் ஆரம்பத்தில் கருத்துத் தெரிவித்த அமைச்சர் இ. சந்திரசேகரன்,

இந்தப் பொருளாதார மத்திய நிலையத்தை மீள இயக்க வேண்டும் என்று மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில்தீர்மானம்நிறைவேற்றப்பட்டிருந்தது. அதற்கமைவாக வியாபாரிகளுடன் கலந்துரையாடலை நடத்துகின்றோம்.

இலங்கையின் ஏனைய இடங்களில் உள்ள பொருளாதார மத்திய நிலையங்கள் அமைந்துள்ள இடங்களைவிட இந்தப் பொருளாதார மத்திய நிலையம் அமைந்துள்ள இடம் சிறப்பானது. வீதியோரத்தில் அமையப்பெற்றிருக்கின்றது. ஏனைய இடங்களிலும் பொருளாதார மத்திய நிலையங்கள் அமைக்கப்படும்போது அந்தப் பிரதேசங்கள் பிரபல்யமானவையாக இருக்கவில்லை. காலப்போக்கில்தான் அவை பிரபல்யமடைந்தன. அதேபோன்று எதிர்காலத்தில் இந்தப் பொருளாதார மத்திய நிலையமும் மாற்றமடையும் எனக் குறிப்பிட்டார்.

இதன் பின்னர் கடைகளைப் பெற்றுக் கொண்ட வியாபாரிகள் தமது பிரச்சினைகளை முன்வைத்தனர். கடைக்கான முற்பணத்தை வழங்கியபோதும் இதுவரை வியாபார நடவடிக்கை நடைபெறவில்லை என்பதையும், அங்கு எத்தகைய தேவைப்பாடுகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும் என்பது தொடர்பிலும் சுட்டிக்காட்டினர்.

குறிப்பாக அந்தப் பகுதியைப் பிரபல்யப்படுத்தும் நடவடிக்கைகளை அதிகாரிகள் மேற்கொள்ள வேண்டும். விவசாயிகளுக்கும் தென்பகுதி வியாபாரிகளும் இதைநோக்கி வருவதற்கு ஏதுவான ஏற்பாடுகளை மேற்கொள் வேண்டும் என கடைகளைப் பெற்றுக் கொண்ட வியாபாரிகள் சந்திப்பில் சுட்டிக்காட்டினர். அதற்காக தமக்கு சில சலுகைகளை வழங்கவேண்டும் என்று கோரிக்கை முன்வைத்தனர்.

இதன்போது கருத்து வெளியிட்ட ஆளுநர்,

விவசாயிகளுக்கு குறிப்பிட்ட கால அவகாசம் வழங்கப்பட வேண்டும். அவர்களின் கோரிக்கைகளுக்கு அமைவாகப் பொருளாதார மத்திய நிலையத்தில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்படவேண்டும். அத்துடன் இந்தப் பொருளாதார மத்திய நிலையத் திட்டம் தயாரிக்கப்படும்போது சில பகுதிகளில் சேகரிப்பு நிலையங்கள் உருவாக்கப்பட்டு அங்கிருந்து பொருளாதார மத்திய நிலையத்துக்கு கொண்டு வரப்படவேண்டும் என்றும் ஆளுநர் சுட்டிக்காட்டினார்.

பொருளாதார மத்திய நிலையத்தை செயற்படுத்துவதற்கான ஒத்துழைப்புக்களை வழங்கத் தயார் என அமைச்சர் இ.சந்திரசேகரன் குறிப்பிட்டார். மேலும் இந்தப் பொருளாதார மத்திய நிலையத்துக்கு உரிய நிர்வாகக் குழுவும் மீளமைக்கப்பட்டது.





# மன்னார் சௌத்பார் கடற்கரை ஓரங்களில் ஆபத்தை ஏற்படுத்தும் பிளாஸ்டிக் மூலப்பொருள்

**(மன்னார் எஸ்.ஆர்.லெம்பேட்)**

மன்னார் மாவட்டத்தில் சௌத்பார் தொடக்கம் தாழ்வுபாடு உட்பட பல்வேறு கடற்கரையோர பகுதிகளில் நுண்ணிய பிளாஸ்டிக் போன்ற சிறிய அளவிலான உருண்டைகள் லட்சக் கணக்கில் கரை ஒதுங்கியுள்ளன.

முன்னதாக இலங்கை கடற்பரப்பில் பற்றியெரிந்த எவர் கிறீன் கப்பலில் இருந்து வெளியேறிய அதே போன்ற வடிவமுடைய பொருளே கரையொதுங்கி வருகிறது.



இவ்வாறான பின்னணியில் கரையோர காவல் திணைக்களத்தினர், கடற்படை, இராணுவம் இணைந்து முதற்கட்டமாக கடற்கரை ஓரங்களில் ஒதுங்கியுள்ள குறித்த பிளாஸ்டிக் மாதிரி பொருள்களை அகற்றியுள்ளனர்.

குறிப்பாக கடற்கரையோரங்களில் லட்சக் கணக்கில் இவ்வாறான ஆபத்தை ஏற்படுத்தக் கூடிய நுண்ணிய பொருள்கள் காணப்படுகின்றமையால் முழுமையாக குறித்த பொருள்களை அகற்ற முடியாத நிலை காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.





# மன்னார் மாவட்ட வைத்தியசாலையில் இராணுவ ஏற்பாட்டில் இரத்ததான முகாம்

**(மன்னார் எஸ்.ஆர்.லெம்பேட்)**

தாய் நாட்டின் சமாதானம் கருதி உயிர் நீத்த இலங்கையர்களை நினைவு கூர்ந்து உலக இரத்த தான தினத்தை முன்னிட்டு இராணுவத்தின் 543 ஆவது படைப்பிரிவு ஏற்பாடு செய்த இரத்ததான முகாம் இன்று சனிக்கிழமை (14) காலை 9.30 மணியளவில் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் இடம்பெற்றது.

மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையின் இரத்த வங்கியின் உதவியுடன் இடம்பெற்ற நிகழ்வில் விருந்தினர்களாக மாவட்ட வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் ஆசாத் எம். கணீபா, மன்னார் நகர பிரதேச செயலாளர் எம்.பிரதீப், மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையின் உதவிப் பணிப்பாளர் வைத்தியர் கில்றோய் பீரிஸ், மன்னார் பொது சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் ரூபன் லெம்பேட், தள்ளாடி 54 ஆவது படைப்பிரிவின் கட்டளையிடும் அதிகாரி மேஜர் ஜெனரல் சமந்த விஜயரத்தின, உள்ளடங்களாக ராணுவ அதிகாரிகள், வைத்தியர்கள், ராணுவத்தினர், வைத்தியசாலை பணியாளர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். இதன்போது கலந்து கொண்ட தள்ளாடி, கள்ளியடி, மாதோட்டம், பேசாலை ஆகிய இராணுவ முகாம்களைச் சேர்ந்த ராணுவ அதிகாரிகள் மற்றும் ராணுவ சிப்பாய்கள் இரத்த தானம் செய்தனர்.





நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# அரசின் பிலாக்கணம்

முன்னைய அரசுகளின் காலத்தில் அரச பொது நிறுவனங்களிலும் சேவைகளிலும் இடம்பெற்ற அளவுக்கதிகமான ஊழல்கள், மோசடிகள், முறைகேடுகள்தான் நாட்டின் பொருளாதாரத்தை மோசமான நிலைக்குத் தள்ளின என்பது பலரதும் அபிப்பிராயம்.

நாட்டில் தீர்க்கப்படாமல் இழுபடும் தேசிய இனப் பிரச்சினையும் இந்த மோசமான நிலைமைக்குக் காரணம் என்றாலும் ஊழல் மோசடிகளும், அந்த விளைவை ஏற்படுத்துவதில் பெரும் பங்களித்திருக்கின்றன என்பதை மறுப்பதற்கு இல்லை.

ஊழல், மோசடிகளை ஒழிக்கிறோம் என்று அரசாங்கம் கூவதில் அர்த்தமில்லை. அதையும் தாண்டி, ஊழல், மோசடிகள், முறைகேடுகள் இல்லாமல் குறைந்த செலவில் பொருள்கள் மற்றும் சேவைகளை அரசு நிறைந்த அளவில் வழங்க வேண்டும். முன்னைய அரச நிர்வாகிகளைக் குறை கூறுவதில் மாத்திரம் ஆட்சி அதிகாரம் நிறைவு பெற்று விடாது. முன்னைய தவறுகளைத் திருத்தி, திருப்தியான - நேர்மையான - ஒழுங்கான - சேவைகளையும் பொது வசதிகளையும் மக்களுக்கு அரசு ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். அதுதான் அரசின் பாராட்டுக்குரிய திறமையாக இருக்கும். அதுதான் அரசின் கடப்பாடும் கூட.

முன்னைய அரசுகளின் சுகாதார சேவைகளில் இடம்பெற்ற ஊழல், மோசடிகள் பற்றிய விடயங்கள் இப்போது பகிரங்கமாகிக் கொண்டிருக்கின்றன. அவற்றை வெளிப்படுத்தி, அம்பலப்படுத்தி, ஆரவாரம் பண்ணுவதில் மட்டும் அரசின் பொறுப்பு நிறைவு பெற்று விடாது. அத்தகைய ஊழல், மோசடி இல்லாமல் சுகாதார சேவையை கனகாத்திரமாக மக்களுக்கு வழங்க வேண்டும். அந்த இரண்டாவது விடயத்தில் புதிய அரசு கோட்டை விட்டு இருப்பதாகவே இப்போதைய தகவல்கள் தெரிவிக்கின்றன.

மத்திய மருந்து சேமிப்பு மையங்களில், சுமார் 180 அத்தியாவசிய மருந்துகளுக்குப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் சமில் விஜேசிங்க தெரிவித்துள்ளார்.

அதேநேரம், மருத்துவமனைகளுக்குள், சுமார் 50 வகையான அத்தியாவசிய மருந்துகள் பற்றாக்குறையாக உள்ளன என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

வலி நிவாரணிகள், நுண்ணுயிர் எதிர்ப்பிகள், உயர் இரத்த அழுத்தம், நீரிழிவு நோய் மற்றும் சிறுநீரக நோய்களுக்கான மருந்துகள் உள்ளிட்ட பல அத்தியாவசிய மருந்துகளுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

கடந்த பல மாதங்களாக புற்றுநோய் நோயாளிகளுக்கான மருந்துக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவுவதாகவும், இதன் விளைவாக புற்றுநோய் நோயாளிகளுக்கு சிகிச்சையளிப்பதில் சில வரையறைகள் ஏற்பட்டுள்ளன எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

ஆக, பழைய அரசுகளை - நிர்வாகங்களை - குறை கூறுவதும், அது பற்றி அதிகம் அலட்டிக் கொள்வதும் அரசியல் ரீதியாக உடனடியாக சில நன்மைகளை இந்த அரசுக்கு தரக்கூடும். ஆனால் வினைத்திறன் மிக்க - நியாயமான - அடிப்படை சேவைகளை எல்லாத் துறைகளிலும் அரசு வழங்கினால் மட்டுமே அந்த அரசின் மீது மக்களுக்கு நம்பிக்கையும் பிடிப்பும் ஏற்படும்.

ஆனால் தேசிய மக்கள் சக்தி அரசு பழைய அரசுகளை - நிர்வாகிகளை - குறை கூறி, பிலாக்கணம் வைத்துக் கொண்டிருக்கின்றது. நாட்டைப் புதிய வடிவத்தில் கட்டமைப்பதற்கு கிடைத்த அரிய வாய்ப்பைக் கோட்டை விட்டு, அது வேறு என்னவோ செய்து கொண்டிருப்பதாகவே தோன்றுகின்றது.



# கிழக்கின் 100 சிறுகதைகள், கிழக்கின் கவிக்கோர்வை இரு நூல்களது அறிமுக விழா திருகோணமலையில்!

(ஹஸ்பர் ஏ.எச்.)

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் கிழக்கின் 100 சிறுகதைகள் இரண்டினதும் தொகுப்பும் மற்றும் கிழக்கின் கவிக்கோர்வை தொகுப்பும் ஆகிய இரு பாரிய நூல்கள் அறிமுகம் செய்து வைக்கப்பட்டுள்ளன.

திருகோணமலையில் உள்ள கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்கள மண்டபத்தில் நிகழ்வு நடைபெற்றது.

பண்பாட்டலுவல்கள் திணைக்கள கிழக்கு மாகாணப் பணிப்பாளர் ச . நவநீதன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் கிழக்கின் 100 சிறுகதைகள் இரண்டினது நூலின் அறிமுகத்தை எழுத்தாளர் க. யோகானந்தனும், கிழக்கின் கவிக்கோர்வை நூலின் அறிமுகத்தை கவிஞர். மாயன் இ. ஸ்ரீஞானேஸ்வரனும் வழங்க, எழுத்தாளர் களுக்கு பணிப்பாளரால் நூலின் பிரதிகள் வழங்கப்பட்டன. கிழக்கின் 100 சிறுகதைகள் இரண்டினதும், 332 கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த கவிஞர்களது கவிக்கோர்வை கவிதைத் தொகுப்பையும் வெளியிட்டதில் கிழக்கு மாகாணம் பெருமை கொள்கின்றது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.





# கை, கால்கள் கட்டப்பட்ட நிலையில் வீட்டில் இருந்தவர் சடலமாக மீட்பு!

(உடப்பு க.மகாதேவன்)

கை கால்களைக் கட்டப்பட்ட நிலையில் வீட்டில் இருந்தவர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். அங்கு இருந்த வான் ஒன்றும் கொள்ளையிடப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் வென்னப்புவ பகுதியில் இடம்பெற்றுள்ளது.

வென்னப்புவை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட தெற்கு உல்ஹிடியாவ பகுதியில் நேற்று (13) இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக வென்னப்புவை பொலிஸ் நிலையத்துக்கு கிடைத்த முறைப்பாட்டின் அடிப்படையில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

சடலமாக மீட்கப்பட்டவர் 64 வயதுடைய மாரவில, மூதூகட்டுவ பகுதியைச் சேர்ந்தவராவார்.

இந்த வீட்டின் உரிமையாளர்கள் இத்தாலியில் வசித்து வருகின்றனர் என்றும் கொல்லப்பட்டவர் அந்த வீட்டின் காவலாளியாக பணியாற்றி வந்தவர் எனவும் தெரியவந்துள்ளது.

வெளிநாட்டில் வசிக்கும் வீட்டு உரிமையாளரின் உறவினர் ஒருவர் வீட்டுக்கு வந்தபோது, காவலாளி கைகள் மற்றும் கால்கள் கட்டப்பட்ட நிலையில் வீட்டின் அறையொன்றில் சடலமாகக் காணப்பட்டுள்ளார்.

வீட்டின் கராஜில் நிறுத்தப்பட்டிருந்த வான் வாகனமும் காணாமல் போயிந்தது.

இதனை அடுத்துப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்தக் குற்றச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் இதுவரை அடையாளம் காணப்படவில்லை. சந்தேக நபர்களைக் கைது செய்ய வென்னப்புவை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.





# உணவுப் பாதுகாப்பை வலுப்படுத்தல்; ஊடகவியலாளருக்குச் செயலமர்வு!

**(மட்டு.துஷாரா, அபு அலா )**

சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சு, ஐக்கிய நாடுகள் சபையின் உணவு மற்றும் விவசாய அமைப்புடன்

தொடர்ச்சி▲

இணைந்து, ஐரோப்பிய ஒன்றியக் குழுவின் நிதி உதவியுடன், இலங்கையில் உணவுப் பாதுகாப்பை வலுப்படுத்துவது குறித்து மட்டக்களப்பு மாவட்ட ஊடகவியலாளர்களுக்கான விழிப்புணர்வு மற்றும் அது தொடர்பில் அறிவைப் பகிர்ந்து கொள்வதற்கான செயலமர்வு மட்டக்களப்பு ஈஸ்ட் லகூண் தனியார் விடுதியில் இடம்பெற்றது.

வெகுஜன ஊடக அமைச்சர் வைத்தியர் நலிந்த பண்டாரவின் வழிகாட்டலின் கீழ் இடம்பெற்ற இந்தச் செயலமர்வு, வெகுஜன ஊடக அமைச்சின் பணிப்பாளர் டபிள்யு.

தொடர்ச்சி▼



# உணவுப் பாதுகாப்பை வலுப்படுத்தல்; ஊடகவியலாளருக்குச் செயலமர்வு!

**தொடர்ச்சி▲**

பீ.செவ்வந்தி தலைமையில் இடம் பெற்றது.

இந்த நிகழ்வில் ஊடக அமைச்சின் ஊடகப் பணிப்பாளர் கே.பீ.ஜயந்த, திட்ட முகாமைத்துவ நிபுணர் திருமதி ரீனா ஜெயரெட்ணம், உணவுப் பாதுகாப்புத் திட்டத்தின் தொடர்பாடல் மற்றும் வெளிக்கள செயற்பாட்டு நிபுணர் திருமதி யூடி தீபன் பெறேரா, வெகுசன ஊடக அமைச்சின் உத்தி யோகத்தர் சந்தன, மாவட்ட தகவல் அதிகாரி வடிவேல் ஜீவானந்தன் உள் ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

செயலமர்வில் உணவு பாதுகாப்பு என்றால் என்ன? உணவு பாதுகாப்பு தொடர்பான சட்ட திட்டங்கள், உணவு பாதுகாப்பு தொடர்பாக எவ்வாறு ஊடக அறிக்கையிடுவது போன்ற பல விடயங்கள் தொடர்பாக சுகாதார அமைச்சின் உணவு மருந்து பரிசோதகர் சு.சுதர்ஷன், இலங்கை தேசிய கல்வி நிறுவகத்தின் விரிவுரையாளர் கலாநிதி எஸ்.ஸ்ரீ பிறிந்திரன் மற்றும் மட்டக்களப்பு பிராந்திய சுகாதார பணிப்பாளர் வைத்தியர் ஆர்.முரளீஸ்வரன் ஆகியோரால் விளக்கமளிக்கப்பட்டது.



தகவல் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்ட ஊடகவியலாளர்களை மாத்திரமே உள்ளடக்கியதான இந்த விழிப்புணர்வு செயலமர்வில் மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த சுமார் 30 ஊடகவியலாளர்கள் மாத்திரம்

# மட்டக்களப்பு - வலையிறவு பிள்ளையார் ஆலய கும்பாபிஷேக எண்ணெய் காப்பு

மட்டக்களப்பு – வலையிறவு மடத்துப் பிள்ளையார் ஆலய கும்பாபிஷேகத்தை முன்னிட்டு எண்ணெய் காப்பு சாத்தும் நிகழ்வு இன்று (14) சனிக்கிழமை காலை 7 மணிக்கு விஷேட பூஜை வழிபாடுக ளுடன் ஆரம்பமாகியது.

ஆலய மகா கும்பாபிசேக நிகழ்வு கள், கடந்த வெள்ளிக்கிழமை, ஆலய பிரதம குரு, அருளானந்த சிவாச்சாரியார் குருக்கள் தலைமையில் ஆரம்பமாகின.

விசேட யாக பூசைகள் இடம்பெற்ற நிலையில், இன்றைய தினமும் நாளைய தினமும் எண்ணெய் காப்பு இடம்பெற்றள்ளது.

எண்ணெய் காப்பு சாற்றல் நிகழ்வில் இன்றைய தினம் நூற்றுக் கணக்கான பக்தர்கள் கலந்துகொண்டு எண்ணெய்க் காப்புச் சாத்தினர்.

இதேவேளை மகா கும்பாபிஷேகம், நாளை மறுதினம் திங்கட்கிழமை இடம் பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.






# வடக்கு முதலீட்டு வலயங்களில் முதலிட ஊக்குவிப்புச் செய்யுங்கள்

வடக்கு மாகாணத்தில் முதலீட்டு வலயங்கள் உருவாக்கப்படவுள்ள நிலையில் முதலீட்டாளர்களை அதில் முதலீடு செய்வதற்கு ஊக்குவிக்குமாறு இலங்கைக்கான மலேசியத் தூதர் பாதில் ஹிசாம் ஆடமிடம் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் கோரிக்கை முன்வைத்தார்.

யாழ்ப்பாணத்துக்கு பயணம் மேற்கொண்டுள்ள மலேசியத் தூதர், வடக்கு மாகாண ஆளுநர் தலைமையிலான குழுவினரை வியாழக்கிழமை யாழ். நகரிலுள்ள விடுதி ஒன்றில் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இதன்போது அவர் இந்த விடயத்தை ஆளுநர் சுட்டிக்காட்டியுள்ளார்.

யாழ்ப்பாணத்துக்கும் மலேசியாவுக்கும் இடையிலான பாரம்பரிய உறவுகள் தொடர்பில் மலேசியத் தூதர் ஆளுநருக்கு சுட்டிக்காட்டினார். யாழ்ப்பாணத்தின் தற்போதைய நிலைமைகளை அவதானிப்பது தமது நோக்கம் எனவும் அவர் குறிப்பிட்டார்.

வடக்கு மாகாணத்தின் தேவைப்பாடுகள், முதலீடுகளின் அவசியம் தொடர்பில் ஆளுநர் சுட்டிக்காட்டினார். விவசாயம் மற்றும் கடலுணவு தொடர்பான வளங்கள் வடக்கில் நிறைந்துள்ளன எனவும் அவை பெறுமதிசேர் உற்பத்திப் பொருள்களாக ஏற்றுமதி செய்வதற்கான வாய்ப்புகள் அரிது என்றும் ஆளுநர் தெரியப்படுத்தினார். எதிர்காலத்தில் அமையவுள்ள முதலீட்டு வலயங்களை நோக்கி மலேசிய முதலீட்டாளர்களை ஊக்குவிக்குமாறும் கேட்டுக் கொண்டார்.

முதலீட்டுக்கான வாய்ப்புகள் தொடர்பான தெளிவான வரைபடத்தைக் கோரிய தூமர், முதலீட்டாளர்களுக்கான அனுமதிகள், சலுகைகள் தொடர்பில் விரைவான நடைமுறை தேவை என்றும் குறிப்பிட்டார். ஏனைய சில நாடுகளில் உள்ள விரைவு நடைமுறைகள் தொடர்பிலும் அவர் சுட்டிக்காட்டினார்.

சுற்றுலாத் துறைக்கான பல இடங்கள், வளங்கள் உள்ளபோதும் அவை உரிய வகையில் வெளிநாட்டுச் சுற்றுலாவிகளைச் சென்றடையத்தக்க மூலோபாயம் உருவாக்கப்படுவது எதிர்காலத்தில் அதிகளவு சுற்றுலாவிகளை வடக்கு மாகாணத்தை நோக்கி ஈர்க்கும் எனக் குறிப்பிட்ட தூதர், இது தொடர்பில் தமது அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளத் தயாராக இருக்கிறார் என்றும் தெரிவித்தார்.

மலேசியத் தூதர் ரயில் ஊடாகவே யாழ்ப்பாணத்துக்கான தனது பயணத்தை மேற்கொண்டிருந்ததைச் சுட்டிக்காட்டினார். சுற்றுலாத்துறை மேம்பாட்டின்போது, கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கான பயண நேரத்தை குறைப்பது தொடர்பிலும் கவனம் செலுத்தவேண்டும் என்ற ஆலோசனையையும் ஆளுநரிடம் முன்வைத்தார்.

இந்தச் சந்திப்பில் ஆளுநரின் செயலாளர் மு.நந்தகோபாலன், ஆளுநரின் இணைப்புச் செயலாளர் எந்திரி சு. ராஜேந்திரா, ஆளுநரின் ஊடகச் செயலாளர் கு.டிலீப்அமுதன் ஆகியோரும் பங்கேற்றனர்.







# 18 லட்சம் ரூபா பெறுமதியான வீட்டுத் திட்டத்துக்கு நிதியுதவி!

## 14 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு வழங்கல்

வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சின் ஊடாக மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நிதியின் மூலம் முன்னெடுக்கப்படும் தலா 18 லட்சம் ரூபா பெறுமதியான வீட்டுத் திட்டத்துக்கு தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கான முதல்கட்டக் கொடுப்பனவு வழங்கும் நிகழ்வு வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகனின் பங்கேற்புடன் ஆளுநர் செயலகத்தில் நடைபெற்றது.

வடக்கு மாகாண ஆளுநரிடம், வீடுகள் தேவை என்று முன்வைக்கப்பட்ட கோரிக்கைகள் வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சுக்கு பாரப்படுத்தப்பட்டு உள்ளூராட்சி அமைச்சால் குழு நியமிக்கப்பட்டு பிரதேச செயலர்களின் ஒத்துழைப்புடன் ஒவ்வொரு கோரிக்கையும் ஆராயப்பட்டு 14 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் 4 பேரும், வவுனியா மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் தலா 2 பேரும், மன்னார் மற்றும் கிளிநொச்சி மாவட்டத்துக்கு தலா 3 பேரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இவர்களுக்கான முதல் கட்டக் கொடுப்பனவான 3 லட்சத்து 50 ஆயிரம் ரூபா காசோலையாக பயனாளிகளுக்கு வழங்கி வைக்கப்பட்டன.

நிகழ்வின் ஆரம்பத்தில் வடக்கு மாகாண நிதியும் திட்டமிடலும், சட்டமும் ஒழுங்கும், காணி, மின்சக்தி, வீடமைப்பும் நிர்மாணமும், சுற்றுலா, உள்ளூராட்சி, மாகாண நிர்வாகம், கிராம அபிவிருத்தி, வீதி அபிவிருத்தி, மோட்டார் போக்குவரத்து மற்றும் போக்குவரத்து அமைச்சின் செயலாளர் அ.சோதிநாதன் கருத்துத் தெரிவிக்கையில்,

இந்த முறை மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை நிதி அதிகமாக வழங்கப்பட்டுள்ளமையால் வீட்டுத் திருத்தத்துக்காக 238 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். அவர்களுக்கு தலா 5 லட்சம் ரூபா வழங்கப்படுகின்றது. உங்களுக்கு தலா 18 லட்சம் ரூபா வழங்கப்படுகின்றது. இலங்கையில் நடைமுறைப்படுத்தப்படுகின்ற எந்தவொரு வீட்டுத் திட்டத்திலும் இந்தளவு நிதி வழங்கப்படுவதில்லை. நாம் முதல்முறையாக அதிகளவு நிதியை வீட்டுத் திட்டத்துக்கு வழங்கியுள்ளோம். இதை நடைமுறைப்படுத்த உங்களின் பங்களிப்பை எதிர்பார்க்கின்றோம். அதைப்போல வீடுகளை கட்டி முடித்த பின்னர் நீங்கள் அதில் வாழவேண்டும்.– என்றார்.

ஆளுநர் தனது உரையில்,

உங்களுக்கு சிறிய வீடு அமைக்க நாம் உதவுகின்றோம். அதைப் பெரிய வீடாக மாற்றுவது உங்களின் திறமையில்தான் தங்கியிருக்கின்றது. அதைப்போல எதிர்வரும் மாரி மழைக்கு முன்னர் வீடுகளை கட்டி நீங்கள் குடியமரவேண்டும். உங்கள் கட்டுமானத்தின் முன்னேற்றத்தை எவ்வளவு விரைவாகச் செய்ய முடியுமோ அவ்வளவு விரைவாகச் செய்து அடுத்தடுத்த கட்டக் கொடுப்பனவுகளையும் பெற்றுக் கொள்ள வேண்டும்.– என்றார்.

வடக்கு மாகாண பிரதம செயலாளர் கருத்துத் தெரிவிக்கையில்,

எவ்வளவோ பேருக்கு வீடுகள் தேவையுடையனவாக இருக்கத்தக்கதாக நீங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளீர்கள். நீங்கள் அதிர்ஷ்டசாலிகள். விரைவாக வீடுகளைக்கட்டி குடியமரவேண்டும்.

வீடுகளைக் கட்டுவதில் ஏதாவது பிரச்சினைகள் இருந்தால் என்னைத் தொடர்பு கொள்ளுங்கள். வீடுகளைக் கட்டுவதற்குத் தேவையான மூலப் பொருள்களைக் காலநேரத்துடன் கொள்வனவு செய்யுங்கள்.– என்றார்.







# தையிட்டி திஸ்ஸ விகாரையை வைத்து அரசியல் இலாபம் தேட இடமளியோம்!

## அநுர அரசு திட்டவட்டம்

“யாழ்ப்பாணம் தையிட்டி திஸ்ஸ விகாரைப் பிரச்சினையை, சில அடிப்படைவாதக் குழுக்கள் அரசியல் இலாபத்துக்காகப் பயன்படுத்த முற்படுகின்றன.”

– இவ்வாறு அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

தையிட்டி திஸ்ஸ விகாரை தொடர்பில் கருத்துரைக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

“தையிட்டி திஸ்ஸ விகாரையில் இடம்பெற்ற வழிபாடுகள் தொடர்பிலும், அதை மையப்படுத்திய பிரச்சினைகள் தொடர்பிலும் நாங்கள் அவதானம் செலுத்தியுள்ளோம்.

திஸ்ஸ விகாரையிலுள்ள தேரர்கள் மற்றும் கிராம மக்களுக்கு இந்த விடயத்தில் பிரச்சினைகள் இல்லை. ஆனால், சில அடிப்படைவாதக் குழுக்களே அனைத்தையும் குழப்புவதற்கு முயற்சிக்கின்றன.

குறுகிய அரசியல் நோக்கத்துக்காக இனவாதம் மற்றும் மதவாதம் என்பவற்றை தூண்டிவிட்டு மக்களைக் குழப்புவது அந்தக் குழுக்களின் நோக்கமாக உள்ளது. இதற்கு நாம் இடமளிக்கமாட்டோம்.

நாட்டில் எப்பாகத்தில் இருந்தாலும் ஆன்மீகத் தளங்கள் மற்றும் தொல்லியல் பெறுமதிமிக்க இடங்களை நாம் பாதுகாப்போம். நாட்டிலுள்ள அனைத்து மக்களுக்கும் வழிபாட்டுத் தலங்களுக்கு சென்று, வழிபடுவதற்குரிய சுதந்திரம் உள்ளது. அதனை நாம் பாதுகாப்போம். இந்தப் பிரச்சினையை வைத்து அடிப்படைவாதக் குழுவுக்கு அரசியல் இலாபம் தேடுவதற்கு இடமளிக்கமாட்டோம்.” – என்றார்.

# வீட்டின் மீது மோதிய இ.போ.ச பஸ்!







ஹங்குரன்கெத்த – அதிகாரிகம வீதியில் நுவரெலியா , மல்உல்ல பிரதேசத்தில் இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ் ஒன்று விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்த விபத்து இன்று சனிக்கிழமை காலை 6.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ் ஒன்று வீதியை விட்டு விலகி அருகில் இருந்த வீடொன்றின் மீது மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

நுவரெலியாவில் நிலவும் கடும் மழையுடனான காலநிலை காரணமாக இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்தில் எவருக்கும் உயிர்ச் சேதம் ஏற்படவில்லை.நாட்டில் பஸ் விபத்துக்கள் அதிகரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது

# வரணி விபத்தில் இருவர் காயம்!







(எஸ்.நிதர்ஷன்)

யாழ். தென்மராட்சி, வரணிப் பகுதியில் இன்று இடம்பெற்ற விபத்தில் இருவர் காயமடைந்துள்ளனர்.

சாவகச்சேரி பிரதேச சபைக்குச் சொந்தமான கழிவகற்றும் பவுசர் வாகனத்துடன் மோட்டார் சைக்கிள் மோதுண்டே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது

வரணி, வேம்பிராய் வீதியில் இயற்றாலைப் பகுதியில் இன்று காலை 8 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

வேம்பிராய் வீதியால் வரணிப் பகுதி நோக்கிப் பயணித்த கழிவகற்றும் பவுசர் வாகனம் தும்புருவில் வீதியால் திரும்பிச் செல்ல முற்பட்ட வேளை பின்னால் வந்த மோட்டார் சைக்கிள் அந்தப் பவுசருடன் மோதுண்டு இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவர் காயமடைந்த நிலையில் சிகிச்சைக்காக சாவகச்சேரி ஆதார வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன் மோட்டார் சைக்கிள் சேதங்களுக்குள்ளாகியுள்ளது.

சம்பவம் தொடர்பான விசாரணைகளைக் கொடிகாமம் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

# பாதயாத்திரீகர்களுக்குக் குடிதண்ணீர் வழங்க சிவதொண்டன் அமைப்புக்குப் பவுசர் வழங்கல்



(வி.ரி. சகாதேவராஜா)

கதிர்காமம் நோக்கிய பாதயாத்திரை மேற்கொள்ளும் யாத்ரீகர்களுக்கு குடிதண்ணீர் வழங்கவென, காரைதீவு பிரதேச சபையின் முன்னாள் உபதவிசாளர், சமூக செயற்பாட்டாளர் லயன் க. தட்சணமூர்த்தி , அம்பாறை மாவட்ட சிவதொண்டன் அமைப்புக்கு 7 லட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியுள்ள புதிய தண்ணீர் பவுசரை நன்கொடையாக வழங்கி வைத்தார்.

இந்த நிகழ்வு காரைதீவு கந்தசாமி ஆலயத்தில் ஆலய பிரதம குரு சிவஸ்ரீ சபா கோவர்த்தன சர்மா முன்னிலையில் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

இப்பவுசர், குமண மற்றும் யால காடுகள் வழியாக பாதயாத்திரை செல்லும் பக்தர்களுக்கு குடிதண்ணீர் வழங்க பயன்படுத்தப்படும்.

28 ஆண்டுகால பாதயாத்திரை அனுபவம் கொண்ட தட்சணமூர்த்தி, யாத்ரீகர்கள் சந்திக்கும் துன்பங்களை ஆழமாக உணர்ந்து, இந்த அர்ப்பணிப்பு சேவையை மேற்கொண்டுள்ளார்.

இந் நிகழ்வில், அவரது குடும்பத்தினர், சிவதொண்டன் அமைப்பினர், கோயில் நிர்வாகிகள், கிராமத் தலைவர்கள், கலாசார அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



### சட்டத்துக்குப் புறம்பாகக் கைதிகள் விடுவிப்பு:

# தவறிழைத்த அதிகாரிகளுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை!

## அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவிப்பு

"ஜனாதிபதியின் பொதுமன்னிப்பைத் தவறாகப் பயன்படுத்தி இடம்பெற்ற மோசடிகள் தொடர்பில் முழுமையான விசாரணைகள் ஆரம்பமாகியுள்ளன. இந்த விடயத்தில் தவறிழைத்தவர்களுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கப்படும்."

– இவ்வாறு அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

சட்டத்துக்குப் புறம்பாக சிறைக் கைதிகள் விடுவிக்கப்பட்டுள்ள விவகாரம் தொடர்பில் கருத்துரைக்கும்போதே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"ஜனாதிபதியின் பொதுமன்னிப்புக்காக நீதி அமைச்சின் செயலாளர் மற்றும் ஜனாதிபதியின் செயலாளர் ஆகியோருக்கு அனுப்பப்பட்ட பட்டியலில் பயர் இடம்பெற்றிருக்காத கைதியொருவர் அண்மையில் விடுவிக்கப்பட்டிருந்தார். இதனையடுத்தே இந்த விவகாரம் வெளிச்சத்துக்கு வந்துள்ளது.

இவ்வாறான குற்றச் செயல்கள் மிகவும் நீண்ட நாள்களாக இடம்பெற்றுள்ளன. இத்தகைய குற்றச் செயல்களுக்கு எதிராகத் தற்போது முழுமையான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

சிறைச்சாலைத் திணைக்களத்தில் மட்டுமல்ல ஏனைய திணைக்களங்களிலும் இப்படி நடந்திருந்தால் அவை தொடர்பிலும் விசாரணைகளில் தெரிய வரும். தவறிழைத்த அதிகாரிகள்தான் பயப்பட வேண்டும். தவறிழைக்காமல், நேர்மையாகச் செயற்படும் அரச அதிகாரிகள் எதற்கும் அஞ்ச வேண்டியதில்லை. அவர்கள் சுதந்திரமாகச் செயற்பட முடியும்.

அரச அதிகாரிகள் சுதந்திரமகச் சயற்பட வேண்டும் என்பதற்காகவே வறிழைக்கும் அதிகாரிகளை அடையாளம் காணும் முயற்சிகள் இடம்பெற்று வருகின்றன." – என்றார்.

# கோழிப் பண்ணையைச் சுத்தம் செய்துகொண்டிருந்த இளைஞர் ஒருவர் மின்சாரம் தாக்கிப் பரிதாப மரணம்

புத்தளத்தில் முந்தல் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நவதன்குளம் பகுதியில் உள்ள கோழிப் பண்ணையில் மின்சாரம்தாக்கி இளைஞர் ஒருவன் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று வெள்ளிக்கிழமை மாலை இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்தவர் முந்தல் பகுதியைச் சேர்ந்த 21 வயதுடைய இளைஞர் ஆவார்.

சம்பவ தினத்தன்று மேற்படி இளைஞர் மற்றுமொரு நபருடன் இணைந்து கோழிப் பண்ணையைச் சுத்தம் செய்துகொண்டிருந்தபோது கால் தவறி இயந்திரம் ஒன்றின் மேல் வீழ்ந்ததில் மின்சாரம் தாக்கிக் காயமடைந்துள்ளார்.



காயமடைந்த இளைஞர் புத்தளம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை முந்தல் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## அகமதாபாத் விமான விபத்து:

# இறந்தவர்களின் உடல்கள் டி.என்.ஏ. பரிசோதனை




குஜராத் மாநிலம் அகமதாபாத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஏர் இந்தியா விமான விபத்தில் 241 பயணிகள் தீயில் கருகி இறந்தனர். அவர்களின் உடல்கள் அடையாளம் காண முடியாத அளவுக்கு கருகி உள்ளன.

இதையடுத்து, விபத்து நடந்த இடங்களில் சிதறி உள்ள உடல் பாகங்களை சேகரிக்கும் பணியில் தடயவியல் நிபுணர்கள் தொடர்ந்து ஈடுபட்டுள்ளனர். அந்த பாகங்களின் மரபணு (டிஎன்.ஏ) பரிசோதனை தீவிரமாக நடைபெற்று வருகிறது.

விபத்தில் இறந்த பயணிகளின் உறவினர்கள் பலர் தங்களது டி.என்.ஏ. மாதிரிகளை வழங்கி வருகின்றனர். அத்துடன், விமான பயணிகளின் உடைமைகளை வைத்தும் அவர்களது உடல்களை அடையாளம் காணும் பணி நடைபெற்று வருகிறது.

எனினும் பெரும்பாலான உடல்கள் அடையாளம் காண முடியாத அளவுக்கு தீயில் கருகி உள்ளதால், டி.என்.ஏ. பரிசோதனையை அதிகாரிகள் முடுக்கிவிட்டுள்ளனர். அதற்காக அகமதாபாத்தில் உள்ள தடயவியல் ஆய்வு கூடத்தில் பலர் குவிந்துள்ளனர்.

இதுதொடர்பில் பொலிஸார் கூறும் போது, "இதுவரை 6 பேரின் உடல்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. அவர்களுடைய உடல் குடும்பத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன." என்றனர்.

# விஜய் அண்ணா மீது எனக்கு எந்த விரோதமும் இல்லை

## திவ்யா சத்யராஜ் விளக்கம்





"தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவர் விஜய் அண்ணா மீது எனக்கு எந்த வொரு தனிப்பட்ட விரோதமும் இல்லை. நான் ஒரு அரசியல்வாதியாகத்தான் அவரை கேள்வி கேட்கிறேன்."

– இவ்வாறு தி.மு.க. தகவல் தொழில்நுட்ப அணியின் துணைச் செயலாளரும் நடிகர் சத்யராஜின் மகளுமான திவ்யா சத்யராஜ் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள காணொலி பதிவில்,

"தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவர் விஜய் அண்ணா மீது எனக்கு எந்த வொரு தனிப்பட்ட விரோதமும் இல்லை. நான் ஒரு அரசியல்வாதியாகத்தான் அவரை கேள்வி கேட்கிறேன். எதிர்க்கட்சியில் இருக்கும் பெண்களுக்கும், அவருடைய கட்சியில் இருந்து வெளியே வந்த பெண்களுக்கும் அவருடைய தொண்டர்கள் ஆசிட் வீசுவேன் என்று மிரட்டல் விடுத்திருக்கிறார்கள். இதை அந்த பெண்ணின் அம்மா ஒரு பேட்டியில் கூறியிருக்கிறார்.

உங்களுக்கு பாதுகாவலர்கள் இருப்பது போல அவர்களுக்கு பாதுகாவலர்கள் இல்லை. ஒரு கட்சியின் தலைவராக நீங்கள் இதையெல்லாம் தடுக்க வேண்டும். ஒரு திறமையான அரசியல்வாதி மக்கள் மீதுதான் கவனம் செலுத்த வேண்டும். அதிகாரத்தின் மீது அல்ல." என்று தெரிவித்துள்ளார்.

சில மாதங்களுக்கு முன்பு தி.மு.கவில் இணைந்தார் நடிகர் சத்யராஜின் மகளும், சமூக ஆர்வலருமான திவ்யா சத்யராஜ். ஒரு கூட்டத்தில் பேசிய அவர், "துணை முதல்வர் உதயநிதி ஏ.சி. கேரவனில், சொகுசு விமானத்தில் நண்பர்களின் திருமணத்துக்கு செல்லும் போலி அரசியல்வாதி கிடையாது" என்று கூறியிருந்தார்.

இதனை வைத்து அவர் த.வெ.க. தலைவர் விஜய்யைத்தான் மறைமுகமாக சாடுகிறார் என விஜய் ரசிகர்கள் பலரும் சமூக வலைதளங்களில் திவ்யா சத்யராஜை கடுமையாக விமர்சித்து வந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# கொல்லப்பட்ட தளபதிகளுக்கு பதிலாக ஈரானில் புதிய தளபதிகள் நியமனம்!



ஒபரேஷன் ரைஸிங் லயன் என்ற பெயரில் ஈரான் தலைநகர் தெஹ்ரானிலுள்ள இராணுவ தளவாடங்கள், அணுசக்தி நிலையங்கள், இராணுவ அலுவலகங்கள் உள்ளிட்டவைகளை குறிவைத்து இஸ்ரேல் தாக்குதல் நடத்தி வருகின்ற நிலையில் இந்தத் தாக்குதலில், ஈரானின் முப்படைத் தலைமைத் தளபதி ஜெனரல். முஹம்மது பகேரி, இஸ்லாமிய புரட்சிகர காவல் படைத் தளபதி ஜெனரல். ஹொசைன் சலாமி உள்ளிட்ட முக்கிய இராணுவத் தளபதிகள் கொல்லப்பட்டனர்.

இந்நிலையில், கொல்லப்பட்ட தளபதிகளுக்கு பதிலாக புதிய தளபதிகள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அதன்படி, ஈரானின் முப்படைகளின் தலைமைத் தளபதியாக ஜெனரல். அப்தொல்ரஹிம் மௌசவின்பவரும், இஸ்லாமிய புரட்சிகராவல் படையின் தலைவராக முஹம்மது பக்போர் என்பவரையும் அந்நாட்டு உச்ச தலைவர்அயதுல்லா அலி கமேனிநியமித்துள்ளார் என சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

# ரஷ்யாவில் நிலஅதிர்வு




ரஷ்யாவில் 6.5 மெக்னிடியூட் அளவிலான நிலஅதிர்வு ஏற்பட்டுள்ளது. ரஷ்யாவின் குரில் தீவில் இந்த நில அதிர்வு உணரப்பட்டுள்ளது.

இந்த நிலஅதிர்வு கடல் மேற்பரப்பிலிருந்து 12 கிலோமீற்றர் ஆழத்தில் ஏற்பட்டதாக சர்வதேச செய்திகள் தெரிவிக்கின்றன. சேத விபரங்கள் குறித்த தகவல்கள் இதுவரை வெளியாகவில்லை.



# பதிலடி தாக்குதலை நடத்தும் ஈரான் நூற்றுக்கணக்கான ஏவுகணை வீச்சு

கடந்த 24 மணி நேரத்தில் ஈரான் மீது இஸ்ரேல் இரண்டு முறை தாக்குதல் நடத்தியதற்கு பதிலடியாக இஸ்ரேல் மீது நூற்றுக்கணக்கான ஏவுகணைகளையும், ட்ரோன்களையும் ஏவியுள்ளது ஈரான் இராணுவம்.

'ஒபரேஷன் ட்ரூ ப்ராமிஸ்' என்று இந்த தாக்குதலுக்கு பெயரிடப்பட்டுள்ளதாக இஸ்ரேல் இராணுவம் தெரிவித்துள்ளது. ஈரானின் முக்கிய இராணுவ மற்றும் அணுசக்தி உள்கட்டமைப்புகளை குறிவைத்து இஸ்ரேல் நடத்திய சமீபத்திய வான்வழித் தாக்குதல்களுக்கு நேரடி பதிலடியாக இந்த மிகப்பெரிய தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

முன்னதாக இஸ்ரேல் நடத்திய வான்வழி தாக்குதலில் ஈரானின் முக்கிய ராணுவ தளபதிகள் மற்றும் அதிகாரிகள், அணுசக்தி விஞ்ஞானிகள் கொல்லப்பட்டனர்.

இது தொடர்பாக ஈரான் இராணுவம் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

"ஈரான் இஸ்லாமியக் குடியரசின் பகுதிகளில் காட்டுமிராண்டித்தனமான, குழந்தைகளைக் கொல்லும் சியோனிச பயங்கரவாத ஆட்சியாளர்களால் நேற்று காலை நடத்தப்பட்ட தாக்குதலுக்கு பதிலளிக்கும் விதமாக ஈரான் நாட்டின் தற்காப்பு பிரிவான இஸ்லாமிய புரட்சிகர காவல்படை, ஒரு வலிமையான மற்றும் துல்லியமான பதிலடியைத் தொடங்கியுள்ளது" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இன்னொரு புறம், ஈரானிலிருந்து வரும் ஏவுகணைகள் கண்டறியப்பட்டதாக இஸ்ரேல் தெரிவித்துள்ளது. டெல் அவிவ் மற்றும் ஜெருசலேமில் சைரன்கள் ஒலிக்கப்பட்டதாகவும், இஸ்ரேல் முழுவதும் பல்வேறு இடங்களில் வெடிச்சத்தங்கள் கேட்டதாகவும் அந்நாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

முன்னதாக வெள்ளிக்கிழமை ஈரான் தலைநகர் தெஹ்ரான் மீது வான்வழி தாக்குதலை தொடுத்தது இஸ்ரேல். இதில் தெஹ்ரான் நகரில் உள்ள குடியிருப்புகள் உட்பட பல்வேறு கட்டிடங்கள் சிதிலமடைந்தன. இந்த தாக்குதலை அடுத்து ஈரான் வான்வெளி மூடப்பட்டது. இதை ஈரான் நாட்டின் அரசு ஊடக நிறுவனமான ஐஆர்என்ஏ உறுதி செய்தது. மேலும் அந்நாட்டின் இராணுவ தளங்கள் மற்றும் அணுசக்தி நிலையங்கள் மீது தாக்குதல் நடத்தியதாக இஸ்ரேல் இராணுவம் கூறியது.



பக்கங்கள் - 3

கனடா முரசு

சனிக்கிழமை 14/06/2025

## கனடிய பிரதமர் மார்க் கார்னிக்கு மனித உரிமை அமைப்பு கண்டனம்

மத்திய கிழக்கில் நீண்ட காலமாக மனித உரிமை விழிப்புணர்வில் ஈடுபட்டுள்ள மத்திய கிழக்கில் நீதி மற்றும் சமாதானத்திற்கான கனடியர்கள் என்ற அமைப்பு, மார்க் கார்னியின் அறிக்கையை C2▶

# ஈரானின் செயற்பாடுகளுக்கு கனடா பிரதமர் கண்டனம்


ஈரானின் நடவடிக்கைகளை கனடா பிரதமர் மார்க் கார்னி கண்டித்துள்ளார்.

மத்திய கிழக்கின் நிலவும் பதற்ற நிலையின் எதிரொலியாக, அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

"ஈரானின் அணுசக்தித் திட்டம் நீண்ட காலமாகவே பெரும் கவலையை ஏற்படுத்திய ஒன்று. இப்போது, இஸ்ரேல் முழுவதும் ஈரான் மேற்கொண்ட ஏவுகணை தாக்குதல், பிராந்திய அமைதிக்கே நேரடி அச்சுறுத்தலாக உள்ளது." எனக் குறிப்பிட்டுள்ளார். C2



# வைர நகை கடையில் கொள்ளை: 5 பேருக்கு பொலிஸார் வலைவீச்சு



டொரண்டோவில்உள்ளநோர்த்யோர்க் குதியில் உள்ள வைர நகை கடையில் இடம்பெற்ற கொள்ளை சம்பவம் தொடர்பாக, ஐந்து சந்தேகநபர்களை பொலிஸார் தேடி வருகின்றனர்.

யோங்க் வீதியில் ஸ்டீல்ஸ் அவென்யூருகே உள்ள நகை கடையில் கொள்ளை நடந்ததாக பொலிஸாருக்கு அழைப்பு வந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடையின் காட்சி பெட்டிகளை குறித்த கும்பல், ஆயுதங்களை பயன்படுத்தி உடைத்து, நகைகளை கொள்ளையடித்துள்ளது.

சம்பவத்தின் போது யாருக்கும் காயம் ஏற்படவில்லை என பொலிஸார் தெரிவித்துள்ளனர். சந்தேகநபர்கள் ஒரு வாகனத்தில் தப்பிச் சென்றுள்ளனர்.

ஆனால், ஸ்டீல்ஸ் அவென்யூ ஈஸ்ட் மற்றும் வில்லோடேல் அவென்யூ அருகே அந்த வாகனம் விபத்துக்குள்ளானது.

விபத்தின் பின்னர், சந்தேகநபர்கள் வாகனத்தை விட்டு நடையாய் தப்பி ஓடியுள்ளனர். சந்தேகநபர்கள் குறித்த விளக்கமான விவரங்கள் C2▶




# ஆயுதங்களுடன் ஐந்து பேர் கைது

கனடாவின் வின்னிப்பெக் நகர மற்றும் மனிடோபா மாகாண அரசியல் பொலிஸ் இணைந்து நடத்திய விசாரணையின்போது ஐந்து பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேலும், பெரிய அளவிலான கொக்கெயின் மற்றும் ஆயுதங்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

'ப்ராஜெக்ட் குவாரி' என்ற குற்றவியல் விசாரணை கடந்த 2024 நவம்பரில் தொடங்கப்பட்டது.

இது மனிடோபாவில் உள்ள போதைப் பொருள் மற்றும் துப்பாக்கிச் சரக்குக் கடத்தல் நடவடிக்கைகளை குறிவைத்து நடத்தப்பட்டது.

2025 மார்ச் 17 முதல் 19 வரை, வின்னிப்பெக், ஸ்டோன்வால், மற்றும் ராக்வுட் பகுதிகளில் சோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

இதில்: 30 துப்பாக்கிகள், கிட்டத்தட்ட 60,000 டொலர்கள் மதிப்புள்ள கொக்கெயின் மற்றும் ஹைட்ரோமார்போன் போதைப்பொருள் என்பன பறிமுதல் செய்யப்பட்டன.



ஒரே இடத்தில் இவ்வளவு எண்ணிக்கையிலான ஆயுதங்களை பறிமுதல் செய்வது மிகவும் கவலையளிக்கிறது, குறிப்பாக இவை கும்பல்களில் தொடர்புடையவர்களுக்கு எளிதாக கிடைக்கக்கூடிய நிலையில் இருந்தது என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைதானவர்களுக்கு எதிராக மொத்தம் 53 குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன என தெரிவிக்கப்படுகின்றது.

விசாரணை தொடருகின்ற நிலையில், மேலும் கைது நடவடிக்கைகள் எதிர்பார்க்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

## ஈரானின் செயற்பாடு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இதனைத் தொடர்ந்து, பிராந்தியத்தில் உருவாகும் சூழ்நிலையை மதிப்பீடு செய்ய கனடாவின் தேசிய பாதுகாப்பு பேரவை அவசரமாக கூட எள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இஸ்ரேலுக்கு தன்னை பாதுகாக்கும் உரிமை உள்ளது என்பதை கனடா மீண்டும் உறுதிப்படுத்துகிறது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அனைத்து தரப்புகளும் மிகுந்த ஒழுங்கும், பொறுப்புடன் செயல்பட வேண்டும் எனவும் இராஜதந்திர ரீதியான தீர்வுக்காக முன்னேற வேண்டும் என்றும் அவர் தனது எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளார்.

## கனடிய பிரதமர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கடுமையாக விமர்சித்துள்ளது.

ஈரான் மீது இஸ்ரேல் மேற்கொண்ட தாக்குதலுக்கு கனடா ஆதரவு தெரிவிக்கிறது என அந்த அமைப்பு குற்றம் சுமத்தியுள்ளது.

இது ஐ.நா. சாசனத்திற்கு எதிரானதும், தாக்குதல் குற்றச்சாட்டுக்குரியதுமான செயல் என தெரிவித்துள்ளது.

பதற்றத்தை குறைக்கும் பதிலாக, இஸ்ரேலின் இன அழிப்பு போக்குக்கு மார்க் கார்னி ஆதரவளிக்கிறார்.

இதனால் பிராந்தியம் இன்னும் துயரத்தில் தள்ளப்படுகிறது என அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளது.

## வைர நகை கடையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

எதுவும் தற்போது வெளியாகவில்லை.

இதுதொடர்பான தகவல்களை உடனுக்குடன் பொலிஸாருக்கு வழங்குமாறு பொதுமக்களிடம் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.




# ஒன்றாறியோவில் இரு வாகனங்கள் மோதி விபத்துக்குள்ளானதில் ஒருவர் உயிரிழப்பு

ஒன்றாறியோவில் உள்ள கலிடன் பகுதியில் வியாழன்று மாலை இடம் பெற்ற இரு வாகனங்கள் மோதிய விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இன்னொருவர் காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்த விபத்து மாலை 5 மணிக்கு முன்பாக ஹைவே 9 மற்றும் மவுண்ட் பிளெசன்ட் சாலை சந்திப்பில் நடந்துள்ளது.

ஒருவாகனசாரதிசம்பவஇடத்திலேயே உயிரிழந்துள்ளார் எனவும் மற்றொரு வாகன சாரதி பலத்த அல்லாத காயங்களுடன் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

விபத்திற்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை என்றும், இதற்கான விசாரணை நடைபெற்று வருகின்றது.

விபத்து விசாரணைக்காக, ஹைவே 9 வீதியின் ஹைவே 50 முதல் மவுண்ட் பிளெசன்ட்சாலைவரையிலான பகுதி தற்காலிகமாக மூடப்பட்டதாக பொலிஸார் அறிவித்துள்ளனர்.

# வரி மோசடியில் ஈடுபட்டவருக்கு மூன்றரை ஆண்டுகள் சிறைத்தண்டனை




கனடாவில் வரி மோசடியில் ஈடுபட்ட நபருக்கு நீதிமன்றம் சிறைத்தண்டனை விதித்துள்ளது.

அல்பேர்டா மாகாணத்தில் உள்ள ப்ரூக்ஸ் நகரைச் சேர்ந்த லெஸ்லி சாண்ட் என்பவருக்கு இவ்வாறு தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

கொவிட் பெருந்தொற்று காலத்தில் பல்வேறு அரசு நிவாரணங்களை மோசடியாக பெற்றதற்கும், வருமான வரி செலுத்தாததற்கும் மூன்றரை ஆண்டுகள் சிறைத்தண்டனையும், 798,709.02 டொலர் அபராதமும் விதிக்கப்பட்டுள்ளது.

**Flyte Deck Corporation** என்ற ட்ரோன் விமான சேவை மற்றும் 3D அச்சுப்பதிப்புத் துறையை முன்வைத்து, சந்த் இந்நிறுவனத்தின் ஒரே பங்குதாரராகவும், கையொப்ப அதிகாரியாகவும் இருந்தார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

ஆனால், இந்த நிறுவனம் உண்மையில் இயங்காதது என்றும், வணிக வருமானமே இல்லாதது என்றும் கனடா வருமான வரித்துறை தெரிவித்துள்ளது.

இருப்பினும், 2020 ஏப்ரல் முதல் 2022 ஆகஸ்ட் வரை சந்த் பல்வேறு நிவாரணத் திட்டங்களுக்கு மோசடியான முறையில் பணம் பெற்றுக்கொண்டுள்ளார்.

இந்த முறையில், பொய்யான வணிக ஆவணங்கள், வாடகை ஒப்பந்தங்கள், ஊதிய விவரங்கள், வங்கிக் கடிதங்கள் மற்றும் ஊழியர் பட்டியல்கள் ஆகியவற்றை தயாரித்து சமர்ப்பித்துள்ளார்.

இதன் மூலம் சந்த் 603,376.44 டொலர்களை தனிப்பட்ட முறையில் பெற்று, அதனை வருமானமாக தெரிவிக்காமல் தப்பித்துள்ளார்.

பொலிஸார் நடத்திய விசாரணையின் பின்னர், மேற்படி குற்றவாளி கைது செய்யப்பட்டுள்ளார்.